இளமாலை பொழுதோடு உறவாட போராடும்
கதிரே கலங்காதே செங்கதிரே கலங்காதே
நமக்காக புலித்தோழர் புதுப்பாதை வகுக்கின்றார்
நிலவே காயாதே வெண் நிலவே காயாதே

இளமாலை பொழுதோடு உறவாட போராடும்

மண்ணில் மணி வீழ்ந்து மடியும் கதிர் தள்ள
தன்னை புலித்தோழர் தருகின்றார் நிலம் வெல்ல 2
என்னாசை கண்ணே எதிர் காலம் உனது 2
கண்ணான தமிழீழ கனி உண்பாய் நீ கண்ணே 2

இளமாலை பொழுதோடு உறவாட போராடும்

நெஞ்சோடு நெஞ்சை அன்பாள வேண்டும்
நிறைவான நீதி விதியாக வேண்டும் 2
நஞ்சாளும் உலகை நீ வெல்ல வேண்டும் 2
நாம் யார்க்கும் அஞ்சாது குடி என்று சொல் கண்ணே 2

இளமாலை பொழுதோடு உறவாட போராடும்